மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சூலூர்

முன்னிலை:- திருமதி.**N.**ரேணுகா**.,** பி.ஏ., பி.ல்
மாவட்ட உரிமையியல் நீதிபதி
சூலூர்
2023 ஆம் ஆண்டு, ஜுன் திங்கள் 5 ம் நாள் திங்கள்கிழமை

இடை மனு எண்.2/2023

அசல் வழக்கு எண்**.313/2017**

R.சேகர், தந்தை பெயர் ரெங்கசாமி, வயது சுமார் 34, வசிப்பிடம் நடுத்தோட்டம் கதவு எண்.301, காடுவெட்டி பாளையம் கிராமம், சூலூர் வட்டம், (முன்பு பல்லடம் வட்டம்), கோயம்புத்தூர் மாவட்டம்.

...மனுதாரர் / வாதி

//எதிர்//

1. கருப்புச்சாமி, தந்தை பெயர் சின்னியகவுண்டர், வயது சுமார் 48, வசிப்பிடம் நடுத்தோட்டம், காடுவெட்டி பாளையம் கிராமம், சூலூர் வட்டம், (முன்பு பல்லடம் வட்டம்), கோயம்புத்தூர் மாவட்டம்.

2. பாக்கியலட்சுமி, கணவர் பெயர் கருப்புச்சாமி, வயது சுமார் 43, வசிப்பிடம் நடுத்தோட்டம், காடுவெட்டி பாளையம் கிராமம், சூலூர் வட்டம், (முன்பு பல்லடம் வட்டம்), கோயம்புத்தூர் மாவட்டம்.

...எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

09.11.2022 ம் தேதி தாக்கல் செய்த ஆணையர் அறிக்கை ஆட்சேபனையில் திருத்தம் செய்ய வேண்டி மனுதாரர்/வாதியால் கட்டளை 6 விதி 17 உரிமையியல் நடைமுறைச்சட்டத்தின் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மனு தாக்கலான நாள்: 08.12.2022

இந்த வழக்கானது 14.03.2023 அன்று விசாரணைக்கு எடுக்கப்பட்டு மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.S.முருகசாமி, அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்கள் தரப்பில் திரு.S.S.விஜய்ஆனந்த், அவர்கள் ஆஜராகியும், இதுநாள் வரை இந்நீதிமன்றத்தின் சீரிய கண்காணிப்பில் இருந்து வந்து சாட்சியம் மற்றும் சான்றாவணங்கள் பரிசீலிக்கப்பட்டு இறுதியாக இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

<u>இறுதி உத்தரவு</u>

1. மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.

2. செலவுத் தொகை இல்லை.

<u>செலவு தொகை பட்டியல்</u>

//இல்லை//

(செலவு தொகைப் பட்டியல் இருதரப்பிலும் தாக்கல் செய்யப்படவில்லை)

<u>திருத்தம் செய்ய வேண்டிய விவரம்</u>

1. கடந்த 09.11.2022-ம் தேதி தாக்கல் செய்த ஆணையர் அறிக்கையின் 2-ம் பக்கத்தில் முதல் வரியில் மேற்படி வார்த்தைக்கு அடுத்து உள்ள 2 என்ற வார்த்தையை நீக்கிவிட்டு, மேற்படி என்ற வார்த்தைக்கு அடுத்து "92/2 காலையின் மேற்கோட்டில் தென்வடலாக வரைபடம் 2 ல் உள்ள தடமாக" என்று சேர்க்க வேண்டும்.

2. 1-வது பாராவின் கடைசியில் "92/4 காலையின் கிழகோடு தெற்கோடு மூலையில் இருந்து வடக்கு நோக்கி அளவீடு செய்ய வாதி தரப்பில் அறிவுறுத்தியும் சர்வேயர் கேட்காமல் 92/4 காலையின் தெற்கோட்டில் மையப்பகுதியில் இருந்து வடக்கு நோக்கி அளவீடு செய்தார். மேலும் அவ்வாறு செய்யும் போது 92/4 காலையின் தெற்கோட்டில் இருந்து தாவா தடம் வரை 143 மீட்டர் நீளம் இருந்தது. ஆனால் சர்வேயர் 145.7 மீட்டர் இருந்ததாக குறிப்பிட்டுள்ளார்" என்று சேர்க்கவேண்டும்.

2023 ஆம் ஆண்டு ஜுன் திங்கள் 5 ஆம் நாள் எனது கையொப்பமும், இந்நீதிமன்ற முத்திரையும் இடப்பட்டது.

Sd/N.Renuga

மாவட்ட உரிமையியல் நீதிபதி,

சூலூர்.

Final Order
IA.No..2/2023 in
OS.313/2017 in
Dated:05.06.2023
DMC, Sulur.